THIRU K. VINAYAKAM : Sir, is there any disparity between the scales of pay of the employees of the Local Library Authority in the State and those of the employees of other local bodies such as municipalities and Corporation, and the other Government servants in the State? If so, may I know whether the question of revision of their pay is being or has been referred to the Second Pay Commission?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த உள்ளாட்சி மன்றங்கள், அரசு ஆகியவைகளில் பணி புரிகின்ற பணியாளர்களுக்கு சம்பள வேறுபாடு எதுவும் இல்லை என்று முதலில் குறிப்பிட்டேன். சம்பள வேறுபாடு எதும் இல்லை. இது சம்பளக் கமிஷனுக்கு ரெஃபர் பண்ணுகிற தன்மை அல்ல. இவர்கள் என்.ஜி.ஓ.-க்கள் என்கிற 'காடிகரி'யில் வருபவர்கள் அல்லர். இதற்குச் சமமாக இருக்கும் பணியாளர்களுக்கு எவ்வளவு சம்பள விகிதங்களைச் சம்பளக் கமிஷன் நிர்ணயிக்கிறதோ அதனுடைய அடிப்படையில் நாம் இதை மாற்றியமைக்க வேண்டிவரும். இது பின்னால் தனியாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

கல்லூரி ஆசிரியர்களுக்கு வருங்கால வைப்பு நிதி

* 250 வினா—**திரு. ஆர். கருப்பையா :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) தற்போது கல்லூரி ஆசிரியர்களிடத்திலிருந்து எந்த விகிதத்தில் (Provident Fund) நலநிதி பிடிக்கப்படுகின்றது ?

(இ) இதில் ஏதாவது மாற்றம் செய்ய அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) 6 %.

(இ) இல்லை.

திரு. ஆர். கருப்பையா : தலைவரவர்களே, அரசினர் கல்லூரிகளில் வேலை பார்ப்பவர்களுக்கும், தனியார் கல்லூரிகளில் வேலை பார்ப்பவர்களுக்கும் ஒரே சீரான அடிப்படையில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவார்களா ? புதிதாக, சம்பளத்தை நிர்ணயிக்கும் அந்த முறையிலே சீர் செய்ய அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பிராவிடெண்ட் ஃபண்ட் என்பது தனியார் பள்ளிக்கூடத்தைப் பொறுத்ததாக அமையும். 6 சதவிகிதம் ஆசிரியர்கள் கட்ட வேண்டும், சரிபாதியை நிர்வாகம் கட்ட வேண்டும். இலவசக் கல்வி கொண்டு வந்ததற்குப் பிறகு அந்தப் பாதிக்கு அரசாங்கமே பொறுப்பேற்றுக்கொண்டு, இறுதியில் தருகிறது. கடைசியிலே நிர்வாகம் தருவது ஆசிரியர்கள் கட்டுவது இரண்டையும் சேர்த்து,

மூன்றிலே ஒரு பகுதியை அரசாங்கம், அவர்கள் ஓய்வு பெறும் போது அல்லது அந்தத் தொகையை மீண்டும் பெற்றுக்கொள்ளும் பொழுது தருகின்ற நிலையில் இருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், தனியார் கல்லூரிகளில் பணிபுரியக்கூடிய ஆசிரியர்களிடத்திலே பிடித்தம் செய்யக்கூடிய இந்த பிராவிடெண்ட் ஃபண்ட் பணத்தை பாங்கிலே போடுவது இல்லை, அவர்களுக்குச் சரியான கணக்கில் காண்பிக்கப்படுவ தில்லை என்ற அளவுக்கு புகார் வந்துள்ளதா? அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதற்கு திட்டவட்டமாக ஏதாவது உத்தரவு பிறப்பித்துள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்பொழுது அதுபற்றி புகார் எதுவும் வந்ததாகக் குறிப்புகள் இல்லை. பாங்கிலே கட்ட வேண்டுமென்று விதியிருக்கிறது. அதை மீறினால் அதற்காக கல்வித்துறையைப் பொறுத்தவரை யிலேயுள்ள சட்டதிட்டங்களின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. எம். சுரேந்திரன் : தலைவரவர்களே, கல்லூரி ஆசிரியர் களின் பிராவிடெண்ட் ஃபண்ட் நிதி பிடித்தத்திற்கு, அவர்களின் சம்பளம் அடிப்படையாக இருக்கிறது. இந்தச் சம்பளம் மற்ற ராஜ்யங்களில் இருப்பதைவிட இங்கே குறைவாக இருக்கிறது என்ற புகார் வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட புகார் எதுவும் வரவில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, ஆசிரியர்கள் ஓய்வு பெற்றபின் அவர்களுக்குத் தரப்படும் பிராவிடெண்ட் ஃபண்ட் பணத்தை ஒரே தவணையில் தராமல், இரண்டு, மூன்று தவணை களில் தருவதாக அவர்களிடமிருந்து புகார்கள் எதுவும் வந் துள்ளனவா? ஆமெனில், அத்தகைய நிலையை மாற்றி, ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்கு, பிராவிடெண்ட் ஃபண்ட் நிதியை ஒரே தவணை யில் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதுபற்றி புகார்கள் வந்ததாக இப்பொழுது என்னிடத்தில் குறிப்புகள் இல்லை. அப்படி ஏதாவது இருந்தால், அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அதுபற்றிக் கவனிக்கலாம்.

E.S.I. HOSPITAL AT AYANAVARAM

* 251 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) Whether it is proposed to convert the E. S. I. Hospital at Ayanavaram into a Teaching Institution; and

(*b*) if so, the details thereof?